1993 அக்டோபர் 27]

ஐயா நாராயணன் துணையோடு, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி நாராயணீயின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, என் பதிலைக் கூறுகிறேன். திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மலைக்கோயில் எச்சரிக்கை மணி (அபாயச் சங்கு) பொருத்தப்பட்டு கடந்த 10 ஆண்டுக் காலமாக நடைமுறையில் இருந்து வருகிறது. மேலும், பாது காப்புப்படையும் செயலாற்றி வருகிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணியில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் பாதுகாப்புப்படை உடனடியாக அமைத்ததற்கு எனது மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி.

திரு. ஆர். சிங்காரம் : நன்றிதான். பேராவூரணி ஸ்ரீ நீலகண்டப் பிள்ளையார் கோவிலுக்கு, என்னுடைய கோரிக் கையை ஏற்று, திருமண மண்டபம் கட்ட 7 இலட்சம் ரூபாய் அனுமதித்ததற்கு எனது நன்றியையும் வணக்கத்தையும் பாராட்டுக்களையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள் கிறேன். இந்த முருகனும் நீலகண்டனும் இரண்டு பேரும்— இந்த இரண்டு பேரும்—மிகப் பெரிய சக்தி படைத்தவர்கள். இந்த இரண்டு சக்திகளும்தான் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு மிகப் பெரிய வெற்றியினை (மேசையைத் தட்டும் ஒலி) கொடுத் துக்கொண்டிருக்கின்றன. இந்த இரண்டு சக்திகளும் எம் முருகப்பெருமான் ஆசீர்வதிக்கின்ற கைக்குள்தான் இருக்கிறது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்ச்சியுடன் தெரி வித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 39. திரு. து. மூர்த்தி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

39—

சீர்காழி மீனவர்களுக்கு விசைப்படகு

*15484— திரு. து. மூர்த்தி :

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் உள்ள கட்டுமரம் வைத்துள்ள மீன வர்களுக்கு விசைப்படகு வாங்கிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழி தொகுதியில் உள்ள கட்டுமரம் வைத்துள்ள மீனவர்களிடமிருந்து விசைப்படகு வாங்கிக் கொடுக்குமாறு கோரி விண்ணப்பங்கள் எவையும் பெறப்படவில்லை. விண்ணப்பங்கள் பெறப்படும்போது அன்றைய நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்து விசைப்படகு வாங்கித்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. து. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை-காயிதேமில்லத் மாவட்டம், சீர்காழி தொகுதியில் உள்ள மீனவர்கள் அதிகமாகக் கட்டுமரம் வைத்து தங்களுடைய தொழிலைச் செய்து வருகிறார்கள். இதனால், அதிக தூரம் சென்று மீன் பிடிக்க இயலவில்லை. மேலும், அதிகமாக மீன், இறால் பிடித்து அன்னியச் செலாவணியை ஈட்டித் தர முடியவில்லை. சில நேரங்களில் புயல் காற்று, மழை வந்தால் கட்டுமரத்தால் உயிர்ச் சேதமும் ஏற்படுகிறது. இதனைத் தவிர்ப்பதற்காக, தமிழகத்தினுடைய காவல் தெய்வம், இதய தெய்வம், மீனவர்களின் துயர் துடைத்து வரும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் மீனவர்கள் தங்களுடைய தொழிலை நடத்துவதற்கு விசைப் படகு வாங்கிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்த மட்டில் 50,000 கட்டு மரங்கள் இருக்கின்றன. இந்தக் கட்டு மரங்களுக்கு எல்லாம் விசைப் படகுகள் கொடுக்க வேண்டுமென்றால் பல நூறு கோடி ரூபாய்க்கு மேலாகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. அரசினுடைய நிதி நிலைமை அந்த அளவுக்கு இடம் கொடுக்கவில்லை. ஆனால், அதே நேரத்தில் கட்டுமரங்களை நவீனப்படுத்தி, அவர்களும் நீண்ட தூரம் கடலுக்குள் சென்று மீன் பிடிக்க ஏதுவாக இருக்கும் வகையிலே 50 சதவிகித மானியம், அதிகபட்சமாக, ரூ. 10,000 அளவுக்கு அவுட்-போர்ட் மெஷின், இன்-போர்ட் மெஷின் என்று சொல்லக்கூடிய வெளிப் பொருத்தும் இயந்திரம் மற்றும் உட் பொருத்தும் இயந்திரம் வாங்குவதற்கு நம்முடைய தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே கட்டுமரங்களுக்கு அவுட்போர்ட் மிஷன் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சீர்காழி தொகுதியிலே கட்டுமரங்களுக்கு அவுட்போர்ட் மிஷன் பொருத்துவதற்கு விண்ணப்பங்கள் கொடுத்தால் அவற்றைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.